**கனவில் தொலைந்தவன் – கிரண் நகர்க்கர் (தமிழில் அக்களூர் இரவி); பக். 800; ரூ.1,100; சாகித்திய அகாதெமி, சென்னை – 18; 044 – 24311741.**




ராஜபுத்திரர்களின் பண்பாட்டு அம்சங்களை விளக்கும் வரலாற்று நிகழ்வுகளுடன் புனையப்பட்ட இந்த நாவல் 16-ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் நடைபெறுகிறது. இதன் ஆங்கில மூல நூலான சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'கக்கோல்ட்' என அமைந்திருந்தாலும், கதையின் போக்கை வெளிப்படுத்தும் வகையில் 'கனவில் தொலைந்தவன்' எனத் தமிழில் தலைப்பிட்டுள்ளது சிறப்பு.

மேவாரின் இளவரசன் மகராஜ் குமார் வழியில் கதை செல்கிறது. பிளவுபட்டிருந்த ராஜபுதன அரசுகளை முதன்முறையாக ராணா சங்கா ஒன்றிணைத்த நிலையில் வடகிழக்கில் லோடி வம்சத்தினர், தென்மேற்கில் குஜராத் ராஜ்ஜியம், தென்கிழக்கில் மால்வா ராஜ்ஜியம் என மூன்று புறமும் எதிரிகள் காத்திருந்தனர்.

தனது தம்பியின் அரியணை போட்டிக்கான சதிகளை மகராஜ் குமார் எதிர்கொள்கிறான். மேர்த்தாவின் இளவரசி உள்பட மூன்று பெண்களை திருமணம் செய்தாலும் இளவரசனின் மணவாழ்க்கை சரியாக அமையவில்லை. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், போரைவிட சமாதானம்தான் நாட்டுக்கு நல்லது எனும் இளவரசனின் கோட்பாடு நேருக்கு நேர் போரிட்டு வெல்வது அல்லது உயிர் துறப்பதே வீரம் எனும் ராஜபுத்திரர்களின் கோட்பாடுக்கு முரணாக உள்ளது. இதனால் அவன் ஒரு கோழையாக சித்தரிக்கப்படுகிறான். பின் கொரில்லா யுத்தி முறையை அறிமுகம் செய்து இரு போரில் மேவாருக்கு வெற்றி பெற்று தந்தாலும், அதற்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை.

நூற்றாண்டுகளுக்கு மேலாக போர் செய்யும் மரபை மாற்றிக் கொள்ளாத ராஜபுத்திரக் கூட்டணி நவீன போர் யுத்தியுடன் 40 ஆயிரம் போர் வீரர்களுடனான பாபர் படை முன்பு சிதறுகிறது. பாபர் வருகையோடு 'கனவில் தொலைந்தவன்' கலைகிறது. ராஜபுத்திரர்களின் வரலாறு, பண்பாடு, நாகரிகத்தை அறிய உதவும் நூல் இது.